செய்தி வெளியீடு எண் : 262 நாள் : 09.02.2024

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் திரு. ஆர்.காந்தி அவர்களின் தலைமையில் வாங்குவோர் விற்பனை செய்வோர் சந்திப்பு நடைபெற்றது**

2023–2024 ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரின் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி அவர்களால் "கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் டெல்லி ஆகிய 4 மெட்ரோ நகரங்களில் ரூபாய் 50.00 இலட்சம் செலவில் வாங்குவோர்–விற்பனை செய்வோர் சந்திப்பு நடத்தப்படும்" என அறிவிப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து, முதல் வாங்குவோர் விற்பனை செய்வோர் சந்திப்பு இன்று (09.02.2024) சென்னை, ஹயாத் ரெஜன்சி ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் 10 அரங்குகள் அமைக்கப்பட்டு, சென்னை மற்றும் பெங்களுரு தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலம் கலைஞர் நூற்றாண்டினை ஒட்டி வடிவமைக்கப்பட்ட 1000 புதிய வடிவமைப்புகளில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி இரகங்களும், தேசிய வடிவமைப்பு நிறுவனம், அகமதாபாத் மூலம் பயிற்சி பெற்ற வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட கைத்தறி இரகங்களும், புவிசார் குறியீடு பெற்ற செடிபுட்டா, நெகமம் மற்றும் சுங்குடி சேலைகளும் வாங்குவோர் / விற்போர் சந்திப்பில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வாங்குவோர் விற்போர் சந்திப்பு தொடர்பான கைத்தறி தொகுப்பு கையேடு வெளியிடப்பட்டது.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு முழுவதிலிருந்தும் 282 ஜவுளி வணிகர்கள் கலந்து கொண்டு அரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்ட தனிச்சிறப்பு மிக்க கைத்தறி இரகங்களை பார்வையிட்டு ரூபாய் 40 கோடிக்கு மேல் கைத்தறி இரகங்களை கொள்முதல் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இவ்விழாவில் கைத்தறி துறைக்கென்று தனியாக புதிய வலைதளம் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

மேலும், முன் எப்போதும் இல்லாத வகையில், வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் பொங்கல் 2024 பண்டிகைக்கு 1.77 கோடி சேலைகள் மற்றும் 1.77 கோடி வேட்டிகளுக்கான உற்பத்தி பணிகளை 30.12.2023 அன்றுடன் நிறைவு செய்து, வேட்டி மற்றும் சேலைகள் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தியதால், இத்திட்டத்தினை சிறப்புற நிறைவேற பணியாற்றிய துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கொள்முதல் முகமை நிறுவனங்களுக்கு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், இ.ஆ.ப., கோ–ஆப்டெக்ஸ் செயலாட்சியர் மருத்துவர் இரா.ஆனந்தகுமார், இ.ஆ.ப., கைத்தறி துறை ஆணையர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., நெசவாளர் சேவை மைய இயக்குநர் திரு.முத்துசாமி, தேசிய கைத்தறி வளர்ச்சி கழகத்தின் மண்டல மேலாளர் திரு.இரத்தினவேல், துறை அலுவலர்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in